**அம்பகமுவ பிரதேச சபை**

**நுவரஎலிய மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 27 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 27 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜுலை 27 ஆந் திகதி செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அம்பகமுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2009 ஆண்டின் உள்ளூராட்சி வாரத்தில் 03 ரணவிரு குடும்பங்களில் பிள்ளைகளுக்கு ரூபா 1,500 வீதம் புலமைப் பரிசில்கள் வழங்கும் செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக அனுசரணை வழங்கிய தனியார் நிறுவனம் கொடுப்பனவினை நிறுத்தியமையால் சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டு ரூபா 45,000 தொகை முற்பணக் கணக்கில் முன்கொண்டுவந்து காணப்பட்டது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

சபையினால் மக்கள் வங்கியில் நடத்தப்பட்டு வந்த பொதுக் கணக்கின் மீதி நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 1,345,890 ஆகக் காணப்பட்டதுடன் வங்கி இணக்கக் கூற்றுக்கள் மற்றும் பொழிப்பு காசேட்டின் படி அவை ரூபா 1,246,511 ஆக இருந்தமையால் ரூபா 99,379 தொகையினால் இணக்கமின்மை காணப்பட்டது.

#### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

பெறவேண்டிய 03 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 101,388,827 ஆகக் காணப்பட்டதுடன், அவற்றில் 01 வருடத்தை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 45,810,644 தொகையாகக் காணப்பட்டது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

செலுத்த வேண்டியிருந்த 03 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 147,191,188 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றில் 01 வருடத்தை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 66,856,374 தொகையாகக் காணப்பட்டது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையினால் கூட்டுத்தொகை ரூபா 95,636,764 தொகையான கொடுக்கல் வாங்கல்களை திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

கீழே காணப்படும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி இலக்கம் 218 | சபையின் காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்தம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 1646 | நிறுவனத்தின் வாகனங்கள் எதினதும் ஓட்ட அட்டவணைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பித்திருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 12,479,851 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 1,185,941 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 11,293,910 தொகைக்கான முன்னேற்றமொன்று காணப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

(அ) மீளாய்வாண்டிற்கான மிகையினை முன்னைய ஆண்டின் மிகையுடன் ஒப்பீடு செய்யும் போது ரூபா 11,293,910 இற்கான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டதுடன், அதற்காக 05 மூலவளங்களில் வருமானம் அதிகரித்தல் மற்றும் 05 விடயங்களில் செலவுகள் குறைவடைதல் முக்கிய காரணமாகியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது சம்பள மீளளிப்புகள் என ரூபா 40,855,395 தொகை கிடைத்திருந்ததுடன் சம்பளங்கள் மற்றும் படிகளாக ரூபா 56,461,115 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் சபையின் வருமானத்தில் ரூபா 15,605,720 தொகை சபை ஊழியர்களின் சம்பளம் செலுத்துவதற்காக செலவிடப்பட்டிருந்ததுடன் அத் தொகை சம்பளம் மீளளிப்பு தவிர சபையின் மீண்டுவரும் வருமானத்தில் 28% ஆகும்.

### 2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

மீளாய்வாண்டின் நடைமுறை விகிதம் 0.8:1 தொகை என உச்சமட்டம் அல்லாது காணப்பட்டதுடன் சபையின் நடைமுறை பொறுப்புக்கள் குறைந்த காலத்தில் செலுத்துவதற்கான இயலுமை மிகவும் பலவீன நிலைமையில் காணப்பட்டது. நடைமுறை சொத்துக்களின் 77 சதவீதம் நிர்மாணவேலை கடன்பட்டோரை கொண்டிருந்ததுடன்

சபையின் காசு மீதி ரூபா 2,654,869 ஆன மறைப்பெறுமதியில் காணப்பட்டது. நடைமுறை பொறுப்புக்களில் 75 சதவீதம் நிர்மாணவேலை கடன்கொடுத்தோரினால் அடங்கியிருந்தது.

### 2.4 வருமான நிருவாகம்

### 2.4.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

செயலாளரினால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு.

| வருமான விடயம் | 2015.01.01 திகதியில் உள்ளவாறு நிலுவை | 2015.12.31 திகதியில் உள்ளவாறு நிலுவையில் அறவீடு | 2015 ஆண்டின் போது சிட்டையிடல் | ஆண்டின் போது சிட்டையிட்டவைகளில் அறவீடுகள் | 2015.12.31 திகதியில் உள்ளவாறு நிலுவை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 2015.01.01 திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்து | ஆண்டின் போது சிட்டையிட்டவைகளில் | மொத்த நிலுவை |
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீதவரி | 2,433,400 | 603,295 | 7,049,510 | 5,463,986 | 1,830,105 | 1,585,254 | 3,415,629 |
| வாடகை | 1,951,209 | 250,000 | 11,314,117 | 11,207,950 | 1,701,209 | 106,167 | 1,807,376 |
| ஏனையவை | 4,720,994 | 632,599 | 1,511,905 | 952,958 | 4,088,395 | 558,947 | 4,647,342 |

மேற்கூறிய விபரங்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறு நிலுவை வருமானத்தில் மற்றும் சிட்டை இட்டவைகளில் வருமானம் சேகரிப்பதற்கு முகாமை போதியளவு நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

### 2.4.2 வீத வரி

வருட ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவைத் தொகையில் ஆண்டின் போது அறவீடுகள் 24 சதவீதம் ஆக மாத்திரம் காணப்பட்டதுடன் இந்த நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக பொறுப்புச் சொல்ல வேண்டிய அலுவலர்கள் போதிய கவனம் செலுத்தியிருக்கவில்லை. வருட இறுதியில் காணப்பட்ட நிலுவையில் 18 சதவீதம் எனப்படும் ரூபா 638,345 தொகை அரச ஆதனங்களில் இருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவைகளாகும்.

### 2.4.3 வாடகை

வருட ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவைத் தொகையில் அறவீடுகள் 12 சதவீதமாக காணப்பட்டதுடன் வருட ஆரம்பத்தில் காணப்பட்ட இறைச்சிக் கடை வாடகை நிலுவை ரூபா 1,616,786 தொகையில் ஆண்டின் போது ஒரு தொகையேதும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.4.4 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முத்திரைக் கட்டணம் ரூபா 9,155,662 தொகையும், நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 1,460,895 தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஓய்வுபெற்ற 10 ஊழியர்களிடம் மற்றும் சேவை இடைநிறுத்தப்பட்ட ஒரு ஊழியரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 242,736 தொகையான கடனை அறவிடாமல் முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணங்கள் 387 இன் பிரகாரம் அரசாங்க வங்கி ஒன்றில் இருந்து மேலதிகப்பற்று பெறுதல் தடைசெய்யப்பட்டிருந்த போதிலும் சபையினால் பேணப்பட்டிருந்த 03 நடைமுறை கணக்குகளில் மறை மீதி ஏற்படும் விதமாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) சபைக்கு நன்கொடையாகக் கிடைத்திருந்த டிரக்டர் வண்டி ஒன்றில் மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றின் உரிமையை சபைக்கு உரித்தாக்கியிருக்கவில்லை.

### 3.2 ஒப்பந்த நிருவாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வெலிஓய சனசமூக நிலையம் நிர்மாணிக்கும் நிர்மாண வேலைக்கான மதிப்பீட்டின் பிரகாரம் கூரை நிர்மாணிப்பதற்காக மிலிமீற்றர் 62x62x6 அளவான L அமைப்புடைய இரும்பு வளைகள் பயன்படுத்தப்பட வேண்டுமெனினும் மிலிமீற்றர் 47x47x6 அளவான இரும்பு வளைகள் பயன்படுத்தப்பட்டிருந்தது. மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 484,462 ஆன முழுத்தொகையும் செலுத்தியிருந்ததென 2016 மே 03 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(ஆ) மஸ்கெலியா லக்ஷபான முன்பள்ளி நிர்மாணிக்கும் நிர்மாணவேலையில் 37.6 சதுர மீற்றர் கூரையின் மறைவுப் பலகை பொருத்தியிருக்காத போதிலும் அதற்காக ரூபா 38,014 இற்கான தொகையொன்று செலுத்தப்பட்டிருந்ததென 2016 மே 03 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(இ) ரீகாடன் சேதனப் பசளைத் தளம் நிர்மாணிக்கும் காணியில் காணப்பட்ட 2½ - 3½ அடி சுற்றளவுள்ள 15 பைனஸ் மரங்கள் அகற்றப்பட்டிருந்தன. அத்துடன் அவை அரச மரக்கூட்டுத்தாபனத்தினால் வெட்டப்பட்டு அகற்றப்பட்டன என பேச்சளவில் கூறிய போதிலும் அவ்வாறு மரத்தை வெட்டி எடுத்துக்கொண்டு செல்வதற்காக அறிவித்ததற்காகவோ அல்லது அரச மரக்கூட்டுத்தாபனத்தினால் அம் மரங்கள் வெட்டி அகற்றப்பட்டன என அறிவித்திருந்த எழுத்துமூல சான்றுகளை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. ரிகாடன் சேதனப் பசளைத் தளத்தினை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தில் வளவினை கொங்கிரீட் பண்ணும் போது வரைபின் பிரகாரம் விரிவாக்கல் பொருத்துக்கள் போடப்பட்டிருக்கவில்லை.

### 3.3 செயற்திட்டத் தாமதம்

மரே சனசமூக நிலைய நிர்மாண வேலைக்காக 2014 செப்தெம்பர் 09 திகதி ரூபா 2,930,773 தொகைக்கு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்காக 2015 மே 15 ஆந் திகதி வரை ரூபா 1,281,472 தொகை இடைக்கொடுப்பனவு ஒன்று செலுத்தியிருந்ததுடன் ஒப்பந்தக்காரர் நிர்மாண வேலையை கைவிட்டு சென்றிருந்தார். உடன்படிக்கையின் பிரகாரம் செயலாற்றுகை முறியினை பணமாக்குவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கபட்டிருந்த பாதீட்டின் படி மதிப்பீட்டு வருமானம் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 05 வருமான விடயங்களில் 09 சதவீதம் முதல் 43 சதவீதம் வரையும் 07 செலவு விடயங்களில் 03 சதவீதம் முதல் 68 சதவீதம் வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமாக கட்டுப்பாட்டு கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது 03 வருமான தலைப்புக்களில் மதிப்பீட்டு வருமானத்தில் ரூபா 6,871,231 தொகையினை உழைப்பதற்காக சபைக்கு இயலாதிருந்ததுடன் 2 செலவுத் தலைப்புகளில் மதிப்பீட்டு செலவை மிகைத்து ரூபா 2,860,916 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(இ) பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி இலக்கம் 193 இன் பிரகாரம் பாதீட்டு நிதி ஏற்பாடுகள், குறைநிரப்புடன் ஒப்பீடு செய்து ஒவ்வொரு வரவு/ செலவு விடயங்களில் மிகை/ பற்றாக்குறை பற்றிய விடயங்கள் தெளிவாக்கும் கூற்றொன்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பித்திருக்கவில்லை.

**4.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

சபையினால் பயன்படுத்தப்படும் 15 கணனிகள், 02 நிழற்பிரதி இயந்திரங்கள், டிஜிடல் கமரா ஒன்று, தொலைநகல் இயந்திரம் ஒன்று, தொகைக்காட்டி இயந்திரம் ஒன்று, டுப்லோ இந்திரம் ஒன்று மற்றும் 7 அச்சு இயந்திரங்களை அறுதியாக இனங்காணக் கூடிய விதமாக விவரங்களுடன் பொருட்பதிவேட்டின் உட்படுத்தியிருக்கவில்லை.

**4.3 வருடாந்த பெறுகைகள் திட்டம்**

அரசாங்க பெறுகைகள் வழிகாட்டல் கோவையில் உப பந்தி 4.2 இன் பிரகாரம் வருடாந்த பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 உள்ளகக் கணக்காய்வு**

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 133 மற்றும் 2009 ஜுன் 09 திகதிய இலக்கம் டீஎம்ஏ/2009/01 கொண்ட முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களச் சுற்று நிருபத்தின் பிரகாரம் நிறுவனத்தில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று காணப்படவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) உள்ளகக் கட்டுப்பாடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) கடன்பட்டோர் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(ஈ) சொத்துக்கள் நிருவாகம்
(உ) இருப்புக் கட்டுப்பாடு
(ஊ) ஒப்பந்த நிருவாகம்